பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 04 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது போர்ச்சுக்கல் பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்லோவாகியா சென்றடைந்தார்.
2. பொழுதுபோக்குத் தொழில் உலகின் மிகப்பெரிய தொழில்துறையாக உருவெடுத்துள்ளது என பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரி விதிப்பு குறித்து மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று ஏற்றுமதியாளர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.
4. காங்கிரஸ் கட்சியின் நிர்வாக அமைப்பில் பெரும் மாற்றம் செய்யப்பட இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் கூறியுள்ளார்.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் அணி 18 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது போர்ச்சுக்கல் பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்லோவாகியா சென்றடைந்தார்.

இன்று அதிகாலை அந்நாட்டு தலைநகர் **Bratislava** பசென்றடைந்த அவருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று அவர் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து பேசவுள்ளார்.

முன்னதாக லிஸ்பெனில் போர்ச்சுக்கல் நாட்டிற்கான இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றி குடியரசுத் தலைவர், இந்தியாவின் பல மாநிலங்கள் மற்றும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் நாட்டின் பன்முகத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் பணியாற்றி வருவதாகக் கூறினார்.

இந்தியா – போர்ச்சுக்கல் இடையேயான சகோதரத்துவ உணர்வு மற்றும் ஜனநாயக நற்பண்புகளை வெளிப்படுத்தும் வகையிலும் இந்தியர்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நலனை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

குடியரசுத் தலைவரின் போர்ச்சுக்கல் பயணம் வெற்றிகரமாக அமைந்ததாக வெளியுறவு அமைச்சகத்தின் செயலர் திரு **Tanmaylal** தெரிவித்துள்ளார்.

போர்ச்சுக்கல் பிரதமர் திரு லூயி மாண்டீ நெக்ரோவுடன் குடியரசுத் தலைவர் நடத்திய பேச்சுக்களின்போது இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன், பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பொழுதுபோக்குத் தொழில் உலகின் மிகப்பெரிய தொழில்துறையாக உருவெடுத்துள்ளது என பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த தொழில் வருங்காலத்தில் மேலும் விரிவடையும் என்று கூறினார்.

கலை, கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் விதமாக மத்திய அரசு மும்பையில் வேவ்ஸ் எனப்படும் உலக ஒலி ஒளி மற்றும் பொதுபோக்கு உச்சி மாநாட்டை அடுத்த மாதம் நடத்த இருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாநாடு இந்திய கலைஞர்களுக்கு அதிகாரம் அளித்து அவர்களது படைப்பாற்றலை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

திரைப்படங்கள், இசை, விளையாட்டு, என இந்தியாவின் பொழுதுபோக்கு மற்றும் படைப்பாற்றல் தொழில்துறை துடிப்புமிக்கதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேவ்ஸ் மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட இந்தியாவில் உருவாக்குவோம் போட்டி இத்தொழில்துறையை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்கள் வேவ்ஸ் தளத்தை பிரபலப்படுத்தி இளம் படைப்பாளர்களை இதில் இணைய ஊக்குவிக்குமாறும் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டார்

**[]<<<>>>[]**

அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரி விதிப்பு குறித்து மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று ஏற்றுமதியாளர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்த கூட்டத்தில் வர்த்தக அமைச்சகம், ஏற்றுமதி அபிவிருத்தி கவுன்சிலின் உயரதிகாரிகள் மற்றும் இந்திய ஏற்றுமதியாளர் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இறால் மீன், தரை விரிப்புகள், மருத்துவ சாதனங்கள் மீது கூடுதல் வரி விதிப்பால் ஏற்படும் தாக்கம் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

நேபாளத்தில் இன்று நடைபெறும் பிம்ஸ்டெக் அமைப்பின் வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கலந்து கொள்கிறார்.

இந்த பயணத்தின்போது திரு சௌகான் நேபாள பிரதமர் திரு கே பி சர்மா ஒலி மற்றும் அந்நாட்டு வேளாண் அமைச்சர் திரு ராம்நாத் அதிகாரி உள்ளிட்டோரை சந்தித்து பேச இருப்பதாக வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – நேபாளம் இடையே வேளாண் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாக இருப்பதுடன், பூட்டான் நாட்டின் வேளாண் அமைச்சரையும் திரு சௌகான் சந்தித்து பேச உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் பயிலும் இந்திய மாணவர்கள் நாட்டின் கலாச்சாரம் மற்றும் நன்மதிப்புகளை பறைசாற்றும் தூதர்களாக திகழ்கின்றனர் என மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

உஸ்பெக்கிஸ்தானின் சமர்கண்ட் மருத்துவ பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்திய மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், விரைவான சீர்திருத்தங்களுடன் வாய்ப்புகளுக்கான பூமியாக புதிய இந்தியா திகழ்கிறது என்றார்.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்கள் சுகாதாரத்துறையில் ஏராளமான வாய்ப்புக்களை உருவாக்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் இந்தியர்களின் நலனை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காங்கிரஸ் கட்சியின் நிர்வாக அமைப்பில் பெரும் மாற்றம் செய்யப்பட இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் கூறியுள்ளார்.

அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பாக செயற்குழுவில் விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இன்று நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், செயற்குழு உறுப்பினர்கள் உட்பட நாடு முழுவதிலுமிருந்து சுமார் மூவாயிரம் பிரதிநிதிகள் பங்கேற்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் தேசிய அரசியல் மற்றும் குஜராத் மாநிலத்தின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும் திரு வேணுகோபால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில் 100 லட்சம் பேல் பருத்தி கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 263 லட்சம் பேல் பருத்தி விற்பனைக்கு வந்துள்ள நிலையில், அதில் 38 சதவீதம் அரசு அமைப்புகளால் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக தெலங்கானா மாநிலத்தில் 40 லட்சம் பேல் பருத்தியும், அதற்கு அடுத்தப்படியாக மகாராஷ்டிராவில் 30 லட்சம் பேல் அளவிற்கும், குஜராத்தில் 14 லட்சம் பேல் அளவிற்கும் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக மத்திய ஜவுளி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், ஒடிஸா, மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம் மாநிலங்களிலும் பருத்தி கொள்முதல் செய்யப்பட்டதாகவும், அதற்காக சுமார் 21 லட்சம் விவசாயிகளுக்கு 37 ஆயிரத்து 450 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நடப்பு நிதி ஆண்டுக்கான ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதங்கள் இன்று வெளியிடப்படுகிறது.

மும்பையில் நேற்று முன்தினம் தொடங்கிய ரிசர்வ் வங்கியின் நிதி கொள்கைக்குழுக் கூட்டத்தின் மூன்றாவது நாளான இன்று இதற்கான அறிவிப்பை ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்ஜய் மல்கோத்ரா வெளியிடவுள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், நுகர்வோர் விலை குறியீடு அடிப்படையிலான பணவீக்கம், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்த முடிவுகளும் வெளியிடப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் பெண் சிறை வாசிகள் மற்றும் அவர்களது குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

சிறைச்சாலைகளில் அவர்களுக்கான அடிப்படை வசதிகள், மருத்துவ வசதி மற்றும் அளவுக்கு அதிகமானோர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது குறித்து நான்கு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு

அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர்களுக்கும் மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பெண் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது கண்ணியத்தை காப்பது மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக மனித உரிமை ஆணையத்தின் சிறப்புப் பார்வையாளர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் அணி 18 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பஞ்சாபில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 219 ரன் எடுத்தது.

220 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி ஐந்து விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

**[]<<<>>>[]**

அரிஜெண்டினாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Suruchi phogat** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் 244 புள்ளி ஆறு புள்ளிகளைப் பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆண்கள் 25 மீட்டர் ராபிட் ஃபயர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் விஜய்வீர் சிது தங்கப்பதக்கம் வென்றார்.

இந்த பிரிவில் இந்தியாவுக்கு முதலாவது தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

நான்கு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்துடன் பதக்கப்பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

[]<<<>>>[]

ஆசிய சாம்பியன் ஷிப் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் நிம்போ-வில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் இந்த இணை 15-21, 21-12, 21-11 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Pong ronhoo – Su yin cheng** இணையை வென்றது.

***End of News***